பக்கங்கள் 15+3

# மாலை முரசு

## 12 வயது சிறுவன் விபத்தில் மரணம்!

இராஜாங்கனை பகுதியில் ஓட்டோ ஒன்று பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 12 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

04

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 22 திங்கட்கிழமை 06.01.2025 | அதிர்வு 158

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# யாழில் மீண்டும் சோதனைச் சாவடி

## மக்கள் மத்தியில் அச்சம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக இருந்து அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் திடீரென அமைக்கப்பட்டு வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

போரின் போதும் போர் முடிவுற்ற பின்னரும் கூட பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்திருந்தனர்.

04

# குடாநாட்டில் சட்டவிரோத செயல்கள் தலைதூக்க அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கே காரணம்

## அமைச்சர் சந்திரகேசர் பகிரங்கக் குற்றச்சாட்டு



(ந.லோகதயாளன்)

"யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்யாததால் இங்கு சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் திருட்டுத் தொழிலை ஒழித்தே தீருவோம்."

– இவ்வாறு அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் சுண்ணக்கல் ஏற்றி வந்த பாரவூர்தி விடயத்தில்

04

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் கையெழுத்துப் போராட்டம் இன்று ஆரம்பம்













**(எஸ்.நிதர்ஷன்)**

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராளிகள் நலன்புரிச் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் இன்று யாழ்ப்பாணம் – மடத்தடிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இன்று ஏழாவது நாளாக யாழ் . மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ். பல்கலைக்கழகக் கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்.ஐங்கரநேசன், யாழ். மாநகர சபையின் முன்னாள் மேஜர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் உள்ளிட்ட பிரமுகர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



### அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி

# யாழ். பல்கலை முன்றிலிலும் கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

நீண்டகாலமாக விசாரணையின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி வடக்கு - கிழக்குத் தழுவி முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இன்று யாழ். பல்கலைக்கழக முன்றிலில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றித் தலைவர் கு.துவாரகன் மற்றும் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிவகஜன் ஆகியோரால் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டத்தில் அனைத்துப் பீடங்களினதும் மாணவர் ஒன்றியத் தலைவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஒப்பமிட்டு போராட்டத்துக்கு வலுச் சேர்த்தனர்.

தொடர்ந்து, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் “வெஞ்சிறையின் குரல்” எனும் பாடல் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினரால் குறித்த போராட்டத்தின் நிறைவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அக்கினிச் சிறகுகள் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட இப்பாடலானது மாணிக்கம் ஜெகனின் பாடல் வரிகளில், சங்கீர்த்தனனின் குரலில், சிவ. பத்மஜனால் இசையமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கையெழுத்துப் போராட்டத்துக்குத் தலைமையேற்று கருத்துரையாற்றிய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன், “தமிழ் அரசியல் கைதிகளின் கைதானது தனியே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பார்க்கப்படக் கூடிதொன்றல்ல்மாறாக அனைத்துலக மயமாக்கப்பட வேண்டிய தமிழினப் படுகொலையின் நீட்சியேயாகும்.” - என்று குறிப்பிட்டார்.








# அரிசி விற்பனை குறித்து 774 சுற்றிவளைப்புக்கள்

## வடக்கில் மாத்திரம் என்கிறது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

(கே.வசந்தன்)

அரிசி விற்பனை தொடர்பில் வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

அரிசி விற்பனை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



“அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனம் செலுத்தி 2024ஆம் ஆண்டு அரிசி விற்பனை தொடர்பாக வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா மாவட்டத்தில் அரிசி தொடர்பில் 126 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், வடக்கு மாகாணத்தில் பெரியளவிலான பதுக்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 12 வயது சிறுவன்...

ஓட்டோ வீதியில் சென்றுகொண்டிருந்த நாய் ஒன்றுடன் மோதவிருந்த நிலையில் அதனைத் தடுப்பதற்கு முற்பட்ட வேளை வீதியில் குடைசாய்ந்து இழுத்துச் செல்லப்பட்டு பின்னர் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 12 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன் சாரதி காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

### குடாநாட்டில்...

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் செயற்பட்டது பரவாயில்லை அல்லது நல்லது. கல் அகழ்வு விடயத்தில் அதிகாரிகளின் அசமந்தப்போக்குக் காணப்படுகின்றது.” – என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், சரசாலை பகுதியில் கல் அகழ்ந்த பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒரு லொறியில் சுண்ணக்கல் ஏற்றிச் சென்றபோது, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வழிமறித்து அந்த லொறியைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இந்த விடயமானது கடந்த சில தினங்களாக ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இந்நிலையில் நீங்கள் செய்தது தவறு, குற்றச்செயல்கள் இடம்பெறும்போது அவற்றினைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் மூலமாக வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் இளங்குமரனுக்கு அறிவுறுத்தினேன்.

ஆனால், தற்போது பார்க்கும்போது இளங்குமரன் செய்தது பரவாயில்லை அல்லது நல்லது என்றே தோன்றுகின்றது. இளங்குமரனின் இந்த வேலையால் அனைவரும் கலக்கமடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. வெட்ட வெட்டப் பூதம் கிளம்பியது போல் இன்று பல பிரச்சினைகள் வெளிவருகின்றன.

சரசாலைப் பகுதியில் சட்ட ரீதியான வேலைகள், சட்ட ரீதியற்ற வேலைகள் இடம்பெறுகின்றன. தனியார் காணிகளில் அகழ்வுகள் இடம்பெறுகின்றன, அதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு அருகாமையில் அரச காணிகள் உள்ளன. அதில் அனுமதி பெறப்படாமல் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பதை ஊகித்துக்கொள்ள முடிகின்றது.

இந்த விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இந்தத் தொழிலைப் புரிகின்ற வியாபாரிகளோ, தொழில் புரிகின்ற ஊழியர்களோ அல்லர்.

மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், கிராம செயலர், புவிசரிதவியல் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அரச அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்று குற்றச்சாட்டை முன்வைக்கின்றேன். அத்துடன் இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் விளைகின்றேன்.

சரசாலையில் உள்ள சுண்ணக்கல்லுக்கும் இளங்குமரன் எம்.பி. மறித்த லொறியில் இருந்த சுண்ணக்கல்லுக்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது. அப்படியாயின் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் இந்தத் திருட்டுத் தொழில் இடம்பெறுகின்றதா என்று கேள்வி எழுகின்றது.

ஒரு சிலர் வந்து, இவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பதால் தொழில் இல்லாமல் போகின்றது, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது, மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். ஆனால், இவ்வாறான அகழ்வுகள் மூலமாக ஏற்படுகின்ற அனர்த்தங்களுக்குப் பல பரம்பரைகள் பலியாகும் என்ற விடயத்தை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

ஒரு சில வியாபாரிகளின் பணப் பசியைப் போக்கும் தேவைக்காக இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுமாக இருந்தால் எமது அரசில் இது தடுத்து நிறுத்தப்படும்.” – என்றார்.

### யாழில் மீண்டும்...

இந்நிலையில் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பின்னர் இங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன.

எனினும், அந்தச் சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாற்றம் என்று கூறி புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு சோதனைச் சாவடிகளைத் தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைப்பதுமான இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசின் இந்த நடவடிக்கை பொது மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீண்ட காலமாகப் பருத்தித்துறையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமை அகற்றுவதாக அநுர அரசு உறுதியளித்திருந்த போதிலும் இதுவரையில் அது அகற்றப்படாமலே இருக்கின்றது.







# இரத்தினக்கல் கண்காட்சியை பார்வையிட்ட சஜித் பிரேமதாஸ

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ FACEST Sri Lanka 2025 சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண் காட்சியைப் பார்வையிட்டார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்ட லில் நடைபெற்று வரும் FACEST Sri Lanka 2025 சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியை நேற்று (05) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ பார்வையிட்டார். இந்தக் கண்காட்சி யில் வைக்கப்பட்டி ருந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கூடங்களைப் பார்வை யிட்ட அவர், தேசிய மற்றும் வெளிநாட்டுக் கலைஞர்களின் பல்வேறு வகையிலான வடிவமைப்புக ளையும் பார்வையிட்டார்.



# நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு செம்மலையில் அமோக வரவேற்பு!

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு , செம்மலைப் பகுதி யில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு நேற்று (05) அமோக வரவேற்பளிக் கப்பட்டது.

செம்மலை மற்றும் செம்மலை கிழக்கு கிராமங்களைச் சேர்ந்த இலங் கைத் தமிழரசுக் கட்சியின் ஆதர வாளர்களின் ஏற்பாட்டில் இந்த வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



நாடாளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன் மாலை அணிவிக்கப்பட்டு, சிவப்பு, மஞ்சள் எழுச்சிக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட வீதியூடாக, பட்டாசு வேட்டுக்கள் முழங்க, ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பி னருக்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது. நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக் கப்பட்டன.

இந்த நிகழ்வில் செம்மலை மற்றும், செம்மலை கிழக்கைச் சேர்ந்த கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு வாழ்த்துக்களும் தெரிவிக் கப்பட்டன.

இந்த நிகழ்வில் செம்மலை மற்றும், செம்மலை கிழக்கு கிராம மக்கள், இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆதரவா ளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதிய வைரஸ் தொற்று

சீனாவில் பெருமெடுப்பில் பரவி வரும் மனித வைரஸ் நோய் ஒன்று உலக மக்கள் மனதில் கெடிக் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கையில் அது குறித்து அதிகம் அச்சப்படத் தேவையில்லை என்று மருத்துவத் தரப்பில் நம்பிக்கையூட்டப்படுகின்றது.

சீனாவில் பரவி வரும் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் அல்லது *HMPV* வைரஸ் பயப்பட வேண்டிய ஒன்றல்ல என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அலர்ஜி, நோயெதிர்ப்பு மற்றும் கல உயிரியல் துறையின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

குளிர்காலத்தில் சுவாச நோய்த் தொற்றுகள் பொதுவானவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் புதியது அல்ல என்றும் பொதுவாக சளி அல்லது காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் சுவாச நோய்த்தொற்றுகளை இது ஏற்படுத்துவதாகவும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டார்.

இருப்பினும், எச்.எம்.பி.வி. வைரஸ் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்களுக்கு தீவிரமாக இருக்கலாம் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், "இது தொடர்பான பிரச்சினையான சூழ்நிலை இலங்கையில் பதிவாகவில்லை" என இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

ஆனால், பக்கத்து தேசத்தில் இந்தியாவில் பெங்களூருவில் உள்ள எட்டு மாதக் குழந்தைக்கு மனித மெட்டாப்நியூமோ வைரஸ் பாதிப்பு இருப்பது இன்று உறுதிசெய்யப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது, இந்த வைரஸ் தொற்றுப் பற்றிய முதல் தகவல் எனக் கூறப்படுகின்றது.

பெங்களூரு பாப்டிஸ்ட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்தக் குழந்தை வெளியிடங்கள் எங்கும் பயணம் செய்ததல்ல என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆகையினால் இது ஏற்கனவே உள்ளூரில் தொற்றுப் பரவுதல் பற்றிய கவலையை எழுப்பியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் தொற்றுப் பரவல் நிலைமை எதிர்பாராதது என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

ஆயினும், "தற்போதைய சுவாச நோய்களின் அலை முந்தைய ஆண்டுகளை விட குறைவாக இருப்பதாகவும், வைத்தியசாலைகளில் நோயாளிகள் திறம்பட கவனிக்கப்படுகின்றனர் எனவும் இந்தத் தொற்றுப் பரவி வரும் சீனாவின் நிலைமை குறித்து அந்த நாட்டு அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்" என்றும் உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

இதே சமயம் இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் சுகாதார அதிகாரிகள் அவதானம் செலுத்தி வருகின்றனர் எனவும் இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும், பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உலகளாவிய சுகாதார நிலைமைகளை தொடர்ச்சியாக அவதானித்து வருவதாகவும் இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தனது முகப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

கொவிட் தொற்றுப் பரவலினால் நிலை குலைந்து போன உலக மக்கள் இந்தத் தொற்றுப் பரவல் பற்றிய செய்திகளையும் பேரச்சத்துடன்தான் எதிர்கொள்கின்றனர் என்பதே உண்மை.






# 5.4 மில்லியன் ரூபா பெறுமதியில் கோபாலபுரம் மீனவருக்கு வள்ளங்கள்

## றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் வழங்கிவைப்பு

(எஸ்.எம்.முபீன், அபு அலா)

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள நன்நீர் மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளருக்குத் தொழிலை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கிலும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று என்று றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரனதுங்க தெரிவித்தார்.

இந்தவகையில் 5.4 மில்லியன் ரூபா பெறுமதியில் திருகோணமலை, கோபாலபுரம் பிரதேசத்தில் நன்நீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கு றோட்டறிக் கழகத்தால் வள்ளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வு கோபாலபுரம் மகளிர் சங்கத் தலைவி திருமதி எஸ்.நிஹாரா தலைமையில் கோபாலபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று (05) இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரனதுங்க கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை றோட்டறிக் கழகத் தலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன், திட்டப் பொறுப்பாளர் எஸ். சிவசங்கர் உள்ளிட்ட நன்நீர் மீன்பிடிச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது 10 மீன்பிடி படகுகள் வலைகளுடன் கையளிக்கப்பட்டன.

மீதமுள்ள 20 மீன் பிடி படகுகள் கல்லடி விநாயகர் மீன்பிடி கூட்டுறவு சங்கம் மற்றும் ஈச்சிலம்பத்தையில் உள்ள இலங்கத்துறை ஸ்ரீ செண்பக மீன்பிடி கூட்டுறவு சங்கம் ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

றோட்டறிக் கழக சேவை திட்டத் தலைவர் பி.பி.பி.எச்.எவ். சிவசங்கர் இந்தத் திட்டத்தை ஒருங்கிணைத்தார்.

தலைவர் ஜெகதீசுடன் திருகோணமலை றோட்டறி அங்கத்தவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.







# அட்டாளைச்சேனையில் இரத்ததானம்

(எம்.ஏ.றமீஸ்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு அட்டாளைச்சேனை சேனையூர் இளைஞர்கள் மற்றும் பாலமுனை பிறைட் இளைஞர்கள் அமைப்பினர் ஏற்பாடு செய்யப்பட்ட 'உதிரம் கொடுப்போம் உயிர்களை காப்போம்' எனும் தொனிப் பொருளி லான இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் (04) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான இளைஞர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டு இரத்தானம் செய்தனர்.

இந்த நிகழ்வில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர் மருதராஜன், இளைஞர் சேவை அதிகாரி ஏ. எல். எம். இஸ்மாயில் உள்ளிட்ட வைத்தியர்கள், தாதி உத்தி யோக தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# வட்டிவெளி மக்களுக்கு உலர் உணவுப்பொதிகள்!

(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் வட்டிவெளிக் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 27 குடும்பங்களுக்கு ஒவொன்றும் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வு றோட்டரிக் கழகத்தின் தலைவர் றோட் டேரியன் என். ரதீசன் தலைமையில் நடைபெற்றது. செய லாளர் றோட்டேரியன் எம். சிவபாதசுந்தரம், முன்னாள் உபதவிசாளர் றோட்டேரியன் பெ. பார்த்தீபன், றோட்டேரியன் கே ரவிச்சந்திரன், றோட்டேரியன் இ. சுந்தரராஜன் ஆகியோரும் பங்குபற்றினர்.

இதற்கான நிதியை ஆஸ்ரேலியாவிலுள்ள அன்பாலயம் ஊடாக யாழ். கனகரட்ணம் குடும்பத்தினர் வழங்கியுள்ள னர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட 260 குடும்பங்களுக்கு 6 லட்சத்து 50 ஆயி ரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் பாண்டிருப்பு, திருக்கோவில், ஆலையடிவேம்பு, திராய்க்கேணி மற்றும் நாவிதன்வெளி பகுதிகளுக்கு கல்முனை றோட்ட ரிக்கழகத்தால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காட்டுக்குள் உல்லாசமாக இருந்த சந்தேகத்தில் 8 பேர் கைதாகினர்!

(மஸ்கெலியா)

காட்டுக்குள் உல்லாசமாக இருக்க சென்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் எட்டு பேரை நல்லதண்ணி வனத் துறை அதிகாரிகள் மற்றும் அதிரடி படையினர் நேற்று (05) மதியம் கைது செய் துள்ளனர்.

இந்தச் சம்பவம் காட்மோர் பகுதியில் உள்ள வனப் பகுதியில் இருந்து கவரவில்லை பகுதிக்கு செல்லும் சமவெளி வன பகுதியில் இடம்பெற் றுள்ளது.

25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இரண்டு பெண்கள் 25 வயது முதல் 60 வயதுக்கு உட்பட்ட ஆறு ஆண்கள் அடங்கிய வர்கள் வனப்பகுதியில் உல்லாசமாக இருக்கின் றனர் என்று கிடைக்க பெற்ற இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற நல்ல தண்ணி வனத் துறை அதிகாரிகள் மற்றும் அதிரடி படையினர் இவர்களைக்



கைது செய்துள்ளனர்.

இந்த எட்டுப் பேரும் விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர்.





# மக்களுடைய காணிகளை வழங்குங்கள் திருக்கோணமலை எம்.பி. குகதாசன் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

மக்களுடைய காணிகளை விடுவித்து மக்களுக்கே வழங்குங்கள் என்று இலங்கை தமிழரசு கட்சியின் திருக் கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பட்டணமும் சூழ லும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (03) இடம் பெற்றது.

பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பங்குகொண்ட இலங்கை தமிழரசு கட்சியின் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன், மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அவையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது,

துறைமுக அதிகார சபையினரால் கையகப்படுத்தியுள்ள 5226 ஏக்கர் நிலப் பகுதியில் 1887 ஏக்கர் நிலப் பகுதில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். ஆகவே இந்தப் பகுதியை உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும் என்று காந்திரமாகக் கூறினார். இதேபோன்று வெல்வெறி பகுதியில் அரசால் கையகப் படுத்தப் பட்ட நிலத் தையும் உடனடியாக விடு வித்து உரிமை யாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திருக்கோணமலை நகரத்தில் அமைந்துள்ள மக்ஹய்சர் விளையாட்டு அரங்கம் பாரம்பரியமாகத் திருக்கோண மலையில் பல சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கித் தந்தது. இந்த விளையாட்டு அரங்கைச் மீண்டும் சரி செய்து உருவாக்குவதன் மூலம் பல இளம் விளையாட்டு வீரர்களது ஏக் கத்தை தீர்ப்பதோடு அல்லாமல் சர்வ தேச போட்டிகளை நடத்தி நாட்டுக்கு வருமானத்தையும் வெளிநாட்டு நாணய மாற்று வருவாயையும் பெருக்க இயலும் எனவும் தெரிவித்தார்.

திருக்கோணமலை தள மருத்துவ மனையில் போதிய வசதியின்மையால் மகப்பேறு காலத்தில் பெண்கள் பல சிரமத்துக்கு உள்ளாகின்றனர். ஆகவே சிறப்பான நடுவம் ஒன்று அமைக்க வேண்டும் என்றும் மருத்துவமனைக்கு செல்லும் வீதியைச் செப்பனிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

திருக்கோணமலை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் 03 மதகுகளும், திருக்கோணமலை உப்புவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் 12 வீதிக ளும், 07 மதகுகளும் மறு சீரமைக்க வேண்டும்.– என்றார்.



# ஜனாஸா எரிப்பை ஆராயத் தெரிவுக்குழு அமைக்க முஸ்லிம் எம்.பிக்கள் வலியுறுத்துதல் வேண்டும்

## கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலீலூர் ரஹ்மான்

(நூருல் ஹுதா உமர்)

கொவிட் 19 தொற்று நோயால் உயிரிழந்தவர்களின் சடலங்களை (ஜனாஸா) பலாத்காரமாகத் தகனம் செய்தமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்குமாறு கோரி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்துக்குத் தனிநபர் பிரேரணை ஒன்றை முன் வைத்துள்ளார்.

விவாதத்துக்குத் திகதி குறிப்பிடப்படாத அந்தப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த விடயம் காலம் கடந்த சிந்தனையாக இருந்தாலும் பாராட்டத்தக்கது என்று கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வருடம் இறுதிப் பகுதியில் தகனம் தொடர்பான தீர்மானத்தை எடுத்த குழு உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்துக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் “நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை” நியமிக்க வேண்டும்.

அநீதியான சம்பவத்தைச் செய்த குழுவுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துவதற்குச் சபாநாயகரிடம் சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுக்க வேண்டுதம்.

ஜனாஸாக்களை தகனம் செய்வது



தொடர்பான தீர்மானத்தை எதிர்த்து முஸ்லிம் சமூகத்துக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்குமாறு கோர 21 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் மூலம் கோரிக்கை முன் வைத்திருந்தோம். அந்த கோரிக்கை களை ஊடகங்கள் வாயிலாகவும் அந்தக் காலப் பகுதியில் வெளிகொண்டு வந்திருந்தோம்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக் காலம் தாமதித்தேனும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்குமாறு கோரிய கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமுக்கு பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் சார்பில் நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். அது போன்று ஏனைய உறுப்பினர்களும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டியது கட்டாயமாகும்.

ரவூப் ஹக்கீமின் பிரஸ்தாப பிரேரணையில்,

கொவிட் 19 தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. இந்த நிலையில், சடலங்ளை நல்லடக்கம் செய்வதால் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாய நிலை உள்ளதாகக் கூறி கடந்த அரசு எடுக்கப்பட்ட கொள்கை அளவிலான தீர்மானத்தின்படி செயற்பட்டது. அந்த சடலங்களை உறவினர்களின் உடன்பாடின்றி தகனம் செய்தது. பின்னர் அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டமை சரியானதல்ல. தவறு என்று தெரிவித்து அரசே உத்தியோக பூர்வமாக மன்னிப்புக் கோரியிருந்தது.

இந்தத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களை பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இது குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாகத் தகனம் செய்வதற்குப் பதிலாக ஓட்டமாவடியில், மஜ்மா நகர் எனப்படும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட போதிலும், குடும்ப உறவினர்கள் இறுதிக் கடமைகளைச் செய்வதற்கோ, மரியாதை செலுத்துவதற்கோ, உரிமை மறுக்கப்பட்டது. இது தொடர்பிலும், இந்த விவகாரத்தில் அரசு பாரதூரமான தவறுகளைப் புரிந்துள்ளமையாலும் குறிப்பிட்ட விடயங்களை உரிய முறையில் விசாரணை செய்து பொருத்தமான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கும்படியான கோரிக்கைக்கு மதிப்பளித்து அரசு உடனடியாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும்.- என்றார்.

# மன்னார் முருங்கன் நகரில் 200 போதை மாத்திரைகளுடன் சிலாபம் இளைஞன் கைது!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், முருங்கன் பொலிஸாரால் ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் சிலாபத்துறை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை(4) கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 200 போதை வில்லைகள் அடங்கிய பொதி மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் போதை மாத்திரைகளுடன் முருங்கன் நகர் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை, மீட்கப்பட்ட போதை மத்திரைகடன் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முருங்கன் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



# பறவைகளைச் சுட்டுக் கொன்ற மூவர் துப்பாக்கியுடன் கைது!

(பழுவூரான்)

ஜனாதிபதியின் தூய்மையான இலங்கை என்னும் திட்டத்தின் கீழ் சட்ட நிர்வாக நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக கடுக்காமுனைப் பகுதியில் சட்டவிரோதமாக பறவைகளை கொலை செய்த காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்த 3 நபர்கள் கொக்கட்டிசோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலநிலை மாற்றத்தால் இடம் பெயர்ந்து இலங்கை நோக்கி படையெடுத்துவரும் அரிய வகை பறவைகள் இலங்கையின் பல்வேறு இடங்களில் தமது வாழ்க்கையை கழிப்பது வழக்கம். இவ்வாறு இடம் பெயர்ந்து வரும் பறவைகளைச் சட்டவிரோதமாக கொலை செய்து வியாபாரப்படுத்தும் பல சந்தேக நபர்களை நாடு பூராகவும் பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.



இந்த நிலையில் கொக்கடிச்சோலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பயணித்த வாகனங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. இந்த நிலையில் சந்தேகத்துக்கு இடமான கார் ஒன்றினுள் தடை செய்யப்பட்ட துப்பாக்கிகளும் இறந்த நிலையில் பறவைகளும் மீட்கப்பட்டன. இந்த நிலையில் பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டி சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட மூவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுச் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# எந்த காணிகளையும் அடாத்தாக பிள்ளையான் பிடிக்கவில்லையாம்

**தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இப்படித் தெரிவிப்பு**

(பழுவூரான்)

பிள்ளையான் எந்தக் காணிகளையும் அடாத்தாகப் பிடிக்கவில்லை என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கிய ராகுல் ராஜபுத்திரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 10 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை பிடித்து வைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார். இது சட்டத்துக்கு முரணானது என்று கருத்துக்களை வெளியிட்டு மக்களையும், அதிகாரிகளையும் திசை திருப்பிக் குழப்பும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

உரிய காணிக்கான திட்ட முன்மொழிவுகள் கொடுக்கப்பட்டு அரசியல் கலாசார தலைமைத்துவ மத்திய நிலையத்துக்கான காணி மட்டக்களப்பு திராய்மடுவில் பெறப்பட்டு இருக்கிறது என்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மகாண சபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

75 வருடங்களாக செயல்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான கருத்துக்களையும், தெளிவூட்டல்களையும், மேற்கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 ஏக்கர் அல்ல 20 ஏக்கர் காணியை நீண்ட கால குத்தகைக்குப் பெற்று மிகப் பிரமாண்டமான அலுவலகத்தை கட்டி மக்களுக்கு அரசியல் தொழிவூட்டலை செய்திருக்கலாம்.



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மக்களை தெளிவூட்டுவதற்காக சட்டப்படியாக மூன்று ஏக்கர் காணியை இவ்வாறு பெற்று அரசியல் கலாசார தலைமைத்துவ நிலையத்தை அமைப்பதற்காக முன்வந்தால் அதனை மாற்றி 10 ஏக்கர் காணியைச் சூறையாடி இருக்கின்றார்கள். காணியைக் கொள்ளை அடிருக்கிறார்கள் என மிகப் பொய்யான வதந்திகளை கூறுகின்றனர்.

அதிகாரிகளையும் மக்களையும் திசை திருப்ப வேண்டாம். மக்களுக்காக ஏதாவது நல்ல விடயங்களைச் செய்யுங்கள். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அரசியல் கலாசார தலைமைத்துவ மத்திய நிலையம் அமைத்த பிற்பாடு எல்லா அரசியல் கட்சிகளிலும் இருக்கும் உறுப்பினர்களும் வந்து அங்கு இருக்கும் நூலகத்தை பயன்படுத்தலாம். அங்கு இருக்கும் மண்டபத்தைப் பயன்படுத்தலாம். முடிந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கிய ராகுல ராஜபுத்திரனும் வந்து செல்லலாம்.

எனவே நாம் காணியை அடாத்தாக பிடித்து இந்த மண்டபத்தை அமைக்க வில்லை. சட்டப்படி அதற்கான ஆவணங்கள் அனைத்தும் கச்சேரியிலும், பிரதேச செயலகத்திலும் இருக்கின்றன. அங்கு சென்று பரிசோதித்துப் பார்க்கலாம்.

நாட்டில் பொருளாதார ரீதியாகப் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர். இவ்வாறான சூழலில் மக்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்து மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்போம். வறுமையில் இருக்கும் மக்களை மீட்டெடுப்போம் என்ற அடிப்படையில் தான் நாட்டின் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கின்றார்.

அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைவிட அதிகமாக பெரும்பான்மை கிடைத்திருக்கின்றது. ஆகவே அவர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார். என நாம் எதிர்பார்க்கின்றோம். அவர் நிறைவேற்ற வேண்டும். மக்கள் அதற்காகத்தான் ஆணை வழங்கியிருக்கின்றார்கள். – என்று மேலும் தெரிவித்தார்.





# கல்முனையில் ஒரேநேரத்தில் ஐந்து வாகனங்கள் விபத்து!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இன்று திங்கட்கிழமை வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரே திசையில் பயணித்த ஐந்து வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒன்றுடன் ஒன்று மோதிய சம்பவத்தால் போக்குவரத்து சற்று நேரம் தடைபட்டது.

ஒரே நேரத்தில் அதே விபத்தில் ஓர் ஓட்டோ, ஒரு பஸ், மூன்று கார்கள் என்பன விபத்துக்குள்ளாகி உள்ளன.

வாகனங்களுக்கு மாத்திரம் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிராபத்து இல்லை.

கல்முனை போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காஸ் சிலிண்டர் திருட்டில் ஈடுபட்டவர் பொது மக்களின் உதவியோடு கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல் ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரி பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (05) அதிகாலை 12.45 மணியளவில் காஸ் சிலிண்டர் திருடிய சந்தேக நபரை பொது மக்கள் கைது செய்து சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் சென்னல் கிராமம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என்று பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பொது பயன்பாட்டு ஆணைக் குழுவின் மக்கள் ஆலோசனை கேட்கும் கூட்டம்

## யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று

(எஸ்.நிதர்ஸன்)

இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக் குழுவின் பொது மக்கள் ஆலோசனை கேட்கும் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று (06) நடைபெற்றது.

ஆணைக்குழுவின் மின்சார கட்டணம் திருத்த முன்மொழிவு தொடர்பாக வடக்கு மாகாண பொது மக்களின் ஆலோசனை கேட்கும் கூட்டமே இன்று காலை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை மின்சார சபையின் நிறைவேற்று பணிப்பாளர், உதவி நிர்வாக பணிப்பாளர் மற்றும் துறைசார் அதிகாரிகள் பிரசன்னத்துடன் நடைபெற்ற பொது மக்கள் ஆலோசனை கேட்கும் கூட்டத்தில், பொது அமைப்பின் பிரதிநிதிகள், துறைசார் வல்லுனர்கள், அரச்சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் என வட மாகாணத்தில் இருந்து வந்திருந்த பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். இதேநேரம் மின்சார கட்டமைப்பின் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் நாடு முழுவதும் உள்ள மாவட்ட செயலகங்களில் குறித்த பொது ஆலோசனை கேட்கும் கூட்டம் நடத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் 23 வயது இளைஞன் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

வெளிநாட்டு சிகரெட்டுகளை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (05) ஞாயிற்றுக்கிழமை இரவு 08 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கைகாட்டி பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (05) இரவு சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவு அதிகாரிகளால் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, மலையடிக் கிராமம் 02 பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேகநபர் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து ஒருதொகை வெளிநாட்டு சிகரெட்டுகள் மீட்கப்பட்டிருந்தன. சந்தேக நபர், சான்றுப் பொருள்களுடன் சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



அத்துடன், குறித்த கைது நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி நஸார் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர் பாரூக் போன்ற அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளத்தில் தொழில் பயிற்சிச் சந்தை

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் மாவட்ட செயலக வளாகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் மற்றும் தொழில் பயிற்சி சந்தை நாளை செவ்வாய்க்கிழமை (07) காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 03 மணிவரை இடம்பெறவுள்ளது.

புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஒருங்கமைப்பில் வடமேல் மாகாண சபையின் வழிகாட்டலின் கீழ் இடம் பெறவுள்ள இந்தத் தொழில் சந்தையில் தொழில் வழிகாட்டல்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்கள், வியாபார அபிவிருத்தி சேவைகள், உயர் கல்வி சந்தர்ப்பங்கள், மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவின் முன் அனு பவத்தின்படி கல்விச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் தொடர்பான வழிகாட்டல்கள் என்பன இடம்பெறவுள்ளன.



# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் கலந்துரையாடல்!

(எஸ். சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குச்சவெளிப் பிரதேச சபையில் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது சம்மந்தமான கலந்துரையாடல் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் எம்.எஸ். தௌபீக் தலைமையில் நேற்று (05) இடம்பெற்றது.

குச்சவெளிப் பிரதேச கட்சி ஆதரவாளர்கள் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் எதிர்காலத்தில் கட்சியால் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும், மக்களுக்கு எவ்வாறான விதத்தில் கிராம மட்டங்களில் தெளிவூட்டல்களை நடத்த வேண்டும் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.



# டில்லி அரசை துஷ்பிரயோகம் செய்தே பா.ஜ.க. தேர்தலில் வாக்கு கேட்கிறது

## அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவிப்பு




“டில்லி அரசினை துஷ்பிரயோகம் செய்தே பா.ஜ.க. தேர்லில் வாக்கு கேட்கிறது. பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட டில்லி உள் கட்டமைப்புக்கான இரண்டு மைல்கல் திட்டங்கள் மத்திய அரசு மற்றும் டில்லி நகர நிர்வாகத்தின் கூட்டு முயற்சி.”

- இவ்வாறு ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த அரவிந்த் கேஜரிவால், தன் மீதான விமர்சனங்களுக்கு பதில் அளித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆம் ஆத்மி கட்சி தொடர்ந்து கலகம் மட்டுமே செய்கிறது என்று கூறுபவர்களுக்கான பதிலே இன்றையத் திட்டங்களின் திறப்பு விழாக்கள். அவர்கள் எங்களின் தலைவர்களை சிறைக்கு அனுப்பினார்கள். ஆனால் எங்களுக்கு எதிராக நடந்த அட்டூழியங்களை நாங்கள் பிரச்சினையாக்கவில்லை. நாங்கள் மக்களுக்காக உழைத்தோம். இல்லையென்றால் இந்தத் திட்டங்கள் வந்திருக்காது.

எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் எவ்வாறு எங்களின் பணிகளை முடித்தோம் என்பதற்கு எங்களின் கடந்த பத்து ஆண்டுகால செயல்பாடுகளே ஆதாரம். இன்று பிரதமர் மோடி 38 நிமிடங்கள் பேசினார். அதில் 29 நிமிடங்கள் டில்லி மக்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினையும் துஷ்பிரயோகம் செய்தார். நானும் அதைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அதுமிகவும் மோசமாக இருந்தது. கடந்த 2020 தேர்தலில் பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதி - அது நிறைவேறும் என்று டில்லி தேஹாத் மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். டில்லி தேர்தலுக்கான பிரதமர் மோடியின் ஒரு கொள்கை ஆம் ஆத்மி அரசை துஷ்பிரயோகம் செய் வதே. பிரதமர் மோடி தினமும் டில்லி மக்களை துஷ்பிரயோகம் செய்கிறார். அவர்களை அவமதிக்கிறார். தேர்தலில் மக்கள் அதற்கு தக்க பதிலடி கொடுப்பார்கள்.” - என்றார்.




# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை கடைகளில் குவிந்த மக்கள்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை, புறநகரில் உள்ள துணிக் கடைகளில் நேற்று மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு 9 நாள்கள் விடுமுறை கிடைக்க வாய்ப்புள்ள நிலையில், பெரும்பாலானோர் எதிர்வரும் 10 ஆம் திகதி இரவே சொந்த ஊர்களுக்கு புறப்பட திட்டமிட்டிருப்பதால், நேற்றே துணிக்கடைகளுக்கு சென்று புத்தாடைகளை வாங்கத் திட்டமிட்டிருந்தனர்.

இதனால் சென்னை, புறநகர் பகுதிகளில் நேற்று துணிக் கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

வட சென்னையில், பழைய வண்ணாரப்பேட்டை, எம்.சி. வீதியில் உள்ள ஏராளமான துணிக் கடைகளில் மக்கள் குவிந்ததால், அப்பகுதியில் உள்ள பெரும்பாலான சாலைகளின் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாயினர். ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து பழைய வண்ணாரப்பேட்டை செல்லும் சுரங்கப்பாதையில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, வாகனங்களை பொலிஸார் திருப்பிவிட்டனர்.

தியாகராய நகரில் உஸ்மான் சாலை, பாண்டி பஜார் உட்பட பல்வேறு இடங்களில் நேற்று காலை முதலே பொதுமக்கள் துணிக்கடைகளில் குவிந்தனர்.

குறிப்பாக ரங்கநாதன் தெருவில் நடந்து செல்ல முடியாத அளவுக்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. அங்கு பிரபல ஜவுளிக்கடைகள், நகைக் கடைகளில் ஆடைகள், நகைகளை ஏராளமானோர் வாங்கிச் சென்றனர். அதிகளவில் மக்கள் கூடியதால் அசம்பாவிதங்களைத் தடுக்க பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். இங்கும் காலை முதலே கடும் போக்குவரத்து நெரிசல் நிலவியது. போக்குவரத்து பொலிஸார் போக்கு வரத்தை முறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.




# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு; மில்லியன் கணக்கானோர் பாதிப்பு!

அமெரிக்காவில் தற்போது நிலவும் அதிக பனிப் பொழிவுடனான குளிர் காலநிலை காரணமாக மில்லியன் கணக்கான அமெரிக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் தற்போது கடுமை யான பனிப்பொழிவு மற்றும் குளிர் காலநிலையை எதிர்நோக்கி வரு கின்றனர்.

இதன்காரணமாக அமெரிக்காவின் பல விமான நிலையங்களில் விமானங்கள் தாமதமாவதுடன், பல விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

செயின்ட் லூயிஸ் மற்றும் மிசோரி ஆகிய விமான நிலையங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கன்சாஸ் மற்றும் மிசோரி நகரங்களுக்குப் பனிப்புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது அங்கு தேங்கியுள்ள பனிக் கட்டிகளை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், அமெரிக்காவின் கென்டக்கி, வர்ஜீனியா, மேற்கு வர்ஜீனியா, கன்சாஸ், ஆர்கன்சாஸ் மற்றும் மிசோரி ஆகிய மாநிலங்களில் அவசர காலநிலைபிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தற்போது மத்திய அமெரிக்காவில், மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன், பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.







# 95 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு வழங்கும் ஆப்பிள் நிறுவனம்

ஆப்பிள் நிறுவனம் பயனர்களின் தனியுரிமையை மீறியமை தொடர்பிலான வழக்கில் 95 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பீடு வழங்கவுள்ளது.

ஆப்பிள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு சேவையான சிரியிடம் மேற்கொள்ளப்படும் உரையாடல்களை விளம்பர நோக்கில் பயன்படுத்தியதாக ஆப்பிள் நிறுவனத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதற்காக ஆப்பிள் நிறுவனம் இழப்பீடு வழங்க முன்வந்துள்ளது.

இதன்படி பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான பயனர்கள் ஒவ்வொருவரும் தலா 20 அமெரிக்க டொலர்களைப் பெறவுள்ளனர்.

பக்கங்கள் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 06/01/2025

## மது போதையில் வாகனம் செலுத்தியதால் ஏற்பட்ட விபத்தில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு

கனடாவில் மது போதையில் வாகனம் செலுத்தியவரின் கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்தில் 15 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

02



# முக்கியமான கட்சிக் கூட்டமொன்றை நடத்துகின்றார் கனடிய பிரதமர் ட்ரூடோ

**கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முக்கிய கட்சிக் கூட்டமொன்றை இந்த வாரம் நடத்தவுள்ளார். நாளை மறுதினம் புதன் கிழமை லிபரல் கட்சியின் முக்கிய கூட்ட மொன்று நடைபெற வுள்ளது. பிரதமர் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டுமென கட்சிக்குள் எதிர்ப்பலைகள் எழத் தொடங்கியுள்ளன.**

இவ்வாறான ஓர் பின்னணியில் முக்கியமான கட்சிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. ஒட்டாவாவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு நிகழ்நிலை மூலமும் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் ட்ரூடோவிற்கு எதிராக கொன்சர்வேட்டிவ் கட்சி மற்றுமொரு நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர உள்ளது.



# அமெரிக்க தாக்குதலுடன் தொடர்புடைய நபரின் கனடிய பயணம் குறித்து விசாரணை

அமெரிக்காவில் புத்தாண்டு காலப் பகுதியில் தீவிரவாத தாக்குதல் நடத்தி 15 பேரை படுகொலை செய்த சந்தேக நபரின் கனடிய பயணம் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நியூ ஓர்லானில் வாகனமொன்றை மக்கள் மீது மோதச் செய்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

தாக்குதல்தாரி கடந்த 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஒன்றாரியோவிற்கு பயணம் செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பயணம் தொடர்பிலும் அமெரிக்க புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


சம்சுதீன் ஜாபர் என்ற நபரே இந்த குற்றச் செயலுடன் தொடர்புடையவர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி நபர் தாக்குதலுக்கு முன்னதாக எங்கெல்லாம் பயணம் செய்தார் யாருடன் தொடர்பு பேணி வந்தார் என்பது தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜாபர் கனடாவிற்கு பயணம் செய்திருந்ததனை கனடிய எல்லைப் பாதுகாப்பு பிரிவினர் உறுதி செய்துள்ளனர்.

கனடாவில் தங்கியிருந்த காலத்தில் மேற்படி நபரின் செயற்பாடுகள் குறித்து ஏதேனும் தகவல்கள் இருந்தால் அதனை வழங்குமாறு கனடிய அரசாங்கம் பொதுமக்களிடம் கோரியுள்ளது.



# கனடாவின் ரொறன்ரோ நகரில் இருந்து அதிகளவான குடியேறிகள் வெளியேறினர்

கனடாவின் ரொறன்ரோ நகரில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான குடியேறிகள் வெளியேறி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளில் பின்னர் குடியேறிகள் அங்கிருந்து வெளியேற தொடங்குவது அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கனடியா புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

ரொறன்ரோ, மொன்றியால் மற்றும் வாங்கூவார் பகுதிகளில் குடியேறிகள் வெளியேறும் எண்ணிக்கை அதிகரித்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுச் செலவு அதிகரிப்பு காரணமாக பெரும் எண்ணிக்கையிலான குடியேறிகள் டொரன்டோவை விட்டு வேறும் பகுதிகளுக்கு நகரத் தொடங்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குடியேறிகள் வேறும் இடங்கள் நோக்கி நகர்வதற்கான பிரதான ஏதுவாக வீட்டு வாடகை மற்றும் வீடுகளின் விலைகள் கருதப்படுகின்றது.






# டிக்கட் இன்றி போக்குவரத்தில் ஈடுபடுவோருக்கான எச்சரிக்கை

ரொறன்ரோ பொதுப் போக்குவரத்து சேவையில் டிக்கட் இன்றி பயணம் செய்வோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் உடல் கமராக்களுடன் அதிகாரிகள் கடமையில் ஈடுபட உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ரொறன்ரோ பொதுப் போக்குவரத்து சேவைகளில் கடமையில் ஈடுபடுத்தப்படும் விசேட உத்தியோகத்தர்கள் இந்த உடல் கமராக்களை பயன்படுத்துவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களாக பரீட்சார்த்த அடிப்படையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் உடையில் கண்காணிப்பு பணிகளில் அதிகாரிகள் ஈடுபடுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டிக்கட் இன்றி பொதுப் போக்குவரத்தில் பயணிப்போரினால் வருடாந்தம் ரீ.ரீ.சீ அல்லது ரொறன்ரோ பொதுப் போக்குவரத்துச் சேவை சுமார் 140 மில்லியன் டொலர்களை இழக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகின்றது.

## மது போதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாரியோவின் கிங்ஸ்டன் கிழக்கு பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வான் ஒன்றை செலுத்தியவர் வீதியில் சென்ற சிறுவன் மீது மோதியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.


வாகனத்தில் மோதுண்ட சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

57 வயதான சாரதி ஒருவரே இவ்வாறு மது போதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார்.

மருத்துவ பரிசோதனையின் போது சாரதி, அதிகளவான மது அருந்தியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.





## கனடாவில் வங்கிக்கு தீ வைப்பு:

# சந்தேக நபர்களை தேடி பொலிஸார் வலை வீச்சு

கனடாவில் வங்கி ஒன்றுக்கு தீ மூட்டிய நான்கு சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர்.

யோர்க் பிராந்தியத்தின் மார்க் பகுதியில் அமைந்துள்ள வங்கி ஒன்று தீ மூட்டப்பட்டிருந்தது.

கடந்த வாரம் இந்த சம்பவம் பதிவாகியிருந்தது. வங்கியின் வரவேற்பறை பகுதியில் இந்த தீ பற்றி கொண்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

தீயணைப்பு படையினர் விரைந்து செயல்பட்டு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் தீ மூட்டப்பட்டதாகவும் அந்த சந்தர்ப்பத்திலும் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கருப்பு நிற வாகனம் ஒன்றில் சென்ற நான்கு பேர், தீமூட்டல் சம்பவத்துடன் தொடர்பு பட்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

அனைவரும் கருப்பு நிற ஆடை அணிந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்கள் பற்றிய மேலதிக விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார் கனடா பிரதமர்

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த வாரம் லிபரல் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கட்சி கூட்டத்திற்கு முன்னதாக அவர் பதவி விலகவுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், கட்சியின் தலைமையிலிருந்து ட்ரூடோ உடனடியாக விலகுவாரா ? அல்லது அடுத்த தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பதவியில் நீடிப்பாரா என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை . ஜஸ்டின் ட்ரூடோ 2013 ஆம் ஆண்டு முதல் லிபரல் கட்சியின் தலைவராக இருந்து வருகிறார்.

